


**30. 08. 2025**

**தலைப்பு செய்திகள்**

- **ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில்** பங்கேற்பதற்காக பிரதமர் திரு. நரேந்திரமோடி ஜப்பானிலிருந்து இன்று சீனா புறப்பட்டார்.
- **மின்னணு பொருட்கள் மற்றும் அதன் உதிரிபாகங்களை** உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- **தேசிய சிறுதொழில் தினம் இன்று கொண்டாடப்படுகிறது**
- **தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய்** வெளிநாட்டு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- **பாரீஸில் நடைபெறும் உலக பேட்மிண்டன் சாம்பியன்பட்ட** போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை - சீன இணையை இன்று எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு.நரேந்திரமோடி சீன டியான்ஜினில் நாளை** நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

ஷாங்காய் உணர்வை நிலைநிறுத்துதல் மற்றும் நீடித்த வளர்ச்சி என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இம்மாநாட்டில் மண்டல அளவிலான பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு, பொருளாதார வளர்ச்சி, கலாச்சாரம், மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் ஒத்துழைப்பு குறித்த விவாதங்கள் இடம்பெறும்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட பல்வேறு நாட்டு தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

முன்னதாக தமது ஜப்பான் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று சீனா புறப்பட்ட பிரதமர், டோக்கியோவில் நடைபெற்ற மாகாண ஆளுநர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு தொடர்ந்து வளர்ச்சிக்கண்டு வருவதாக தெரிவித்த பிரதமர், ஜப்பான் மாகாண ஆளுநர்கள் இந்தியாவின் வளர்ச்சிப்பாதையிலும் பங்கேற்க வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து ஜப்பான் பிரதமர், ஷிகரு இஷிபாவுடன் புல்லட் ரயில் மூலம் சென்டை சென்ற பிரதமர், டோக்கியோ எலக்ட்ரான் தொழிற்சாலையை பார்வையிட்டார்.

மின்குறைக்கடத்தி உற்பத்தி தொடர்பாக விரிவாக கலந்துரையாடிய பிரதமர் இத்துறையில் இந்தியா கடந்த சில ஆண்டுகளாக முத்திரை பதித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

மின் குறைக்கடத்தி துறை வளர்ச்சியில் இளையோர் பெரும்பங்கு வகித்துள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், இதற்கு தேவையான அனைத்து முன்னெடுப்புகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

**இதனிடையே அகில இந்திய வானொலியில் மன் கீ பாத்** மனதின் குரல் நிகழ்ச்சியில் 125-வது முறையாக பிரதமர் உரையாற்றும் நிகழ்வு நாளைகாலை 11 மணிக்கு இடம்பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**அஷ்விணி வைஷ்ணன்**

**மின்னனு பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள்** அனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய மின்னனு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் கைப்பேசி பாதுகாப்பு கண்ணாடி உற்பத்தி பிரிவை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், கைபேசியில் பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் நடப்பாண்டு இறுதிக்குள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

❖❖❖❖❖❖❖❖

## ஷிவ்ராஜ் சிங் சௌஹான்

**தேசிய சிறுதொழில் தினம் இன்று** கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதொழில்கள் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு தொழில்களின் பங்கு இன்றியமையாதது என்றார்

உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவு அளிப்போம் என்றும் இந்நாளில் உறுதியேற்போம் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

## நிர்மலா சீதாராமன்

**தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலில்** பி.ஜே.பி. அஇஅதிமுக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைய மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை தேனாம்பேட்டையில் தமிழ்மாநில காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நிறுவனர் ஜி.கே.மூப்பனாரின் 24-வது நினைவு தினத்தை ஒட்டி அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய அவர், சிறிய கருத்து வேறுபாடுகளையும் தாண்டி மாநிலத்தில் நல்லாட்சி அமைய கூட்டணி கட்சிகள் பங்காற்றவேண்டுமென அறிவுறுத்தினார்.

தொடர்ந்து பி.ஜே.பி. தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் நிதியமைச்சர் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

## பொருளாதாரம்

நாட்டின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 7.8 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வேளாண் துறை, நிதி மற்றும் நில விற்பனை, வர்த்தகம், உணவகங்கள் உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சியே இதற்கு காரணம் என தரவுகள் தெரிவிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

## முதலமைச்சர்

**தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 10 லட்சம்** கோடி ரூபாய் அளவில் வெளிநாட்டு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக இன்றுகாலை புறப்படும் முன் சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியஅவர் இதன்மூலம் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

அமெரிக்கா, ஸ்பெயின், ஜப்பான், சிங்கப்பூர், ஐக்கிய அரபு நாடுகளில் தாம் மேற்கொண்ட பயணத்தால் 36 ஒப்பந்தங்கள் போடப்பட்டு, 23 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

தமது பயணத்தின் ஒருபகுதியாக ஜெர்மனியில் நாளை நடைபெறும் **“ஐரோப்பாவில் மாபெரும் தமிழ்கனவு”** நிகழ்வில் உரையாற்றுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

**நெல் கொள்முதல்**

**தமிழகத்தில் உயர்த்தப்பட்ட நெல் கொள்முதல்** விலை வரும் ஒன்றாம் தேதிமுதல் அமலுக்கு வருவதாக அரசு அறிவித்துள்ளது.

இதன்படி சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 545 ரூபாய்க்கும், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 42 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**உதயநிதி**

**சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில்** மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் தூர்வாரும் பணிகளை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

ஓட்டேரி, கொடுங்கையூரில் 70 கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

ரகுபதி

**புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கடைசி மன்னரான** விஜயரகுநாத தொண்டைமானின் நூற்றாண்டு விழாவை மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.ரகுபதி இன்று தொடங்கிவைத்தார்.

மழைநீர் வடிகால், சாலைவசதி, கட்டுமானம் உள்ளிட்ட மக்கள் வளர்ச்சிக்கான அனைத்து திட்டங்களையும் இம்மன்னர்கள் திறம்பட நிறைவேற்றியதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

தமிழிசை

**சென்னை - பெங்களூருவை 3 மணிநேரத்தில் இணைக்கும்** 15 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான எக்ஸ்பிரஸ் வழித்தடம், தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கம் உள்ளிட்ட தமிழகத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பி.ஜே.பியின் திருமதி. தமிழிசை சவுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பி.ஜே.பி., அஇஅதிமுக தேசிய ஜனநாயக கூட்டணி வலுவடைந்து வருவதாகவும், வரும் சட்டப்பேரவை தேர்தலில் இக்கூட்டணி வெற்றிபெறும் என நம்பிக்கை தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

**மகளிர் சுயஉதவிக்குழுவினரின் உற்பத்தி** பொருட்களுக்கான இயற்கை சந்தை சென்னையில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த சுய உதவிக் குழுவினரின் சிறுதானிய மதிப்புகூட்டுப் பொருட்கள், பனை ஓலை பொருட்கள், பாரம்பரிய அரிசி வகைகள் உள்ளிட்டவை இதில் விற்பனை செய்யப்படுகிறது.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள்,** வாரிசுதாரர்களுக்கான இலவச சட்ட உதவிமையம் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

ஜன்தன் வாய்ஸ்

**பிரதமரின் ஜன்தன் வங்கி கணக்கு திட்டம் பெரிதும்** பயனளிப்பதாக திருச்சி மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**அரியலூர் - வாய்ஸ்**

**பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் மூலம் குறைந்த விலையில்** தரமான மருந்துகள் கிடைப்பதாக அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**பேட்மிண்டன்**

**பாரீஸில் நடைபெறும் உலக பேட்மிண்டன்** சாம்பியன்பட்ட போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறு ஆட்டத்தில் இந்தியாவின் ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை - சீனாவின் போ யாங் சென், இ லியு இணை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**US ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் 2-வது** சுற்று போட்டிக்கு இந்தியாவின் அனிரூத் சந்திர சேகர், பிரசாந்த் இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அனிரூத் இணை அமெரிக்க இணையை 3 - 6, 6 - 3, 6 - 4 என்ற செட்களில் வென்றது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖